KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 100
மலர் 6 இதழ் 4

# காவ்யா தமிழ்



24 புரட்டாசி
அக்டோபர் - டிசம்பர் 2017

கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்



மருதநாயகம் முதல்
பேரா. மருதநாயகம் வரை
25 கட்டுரைகள்

சங்கரதாஸ் சுவாமிகள் 150
நா.வானமாமலை 100
வாசுதேவ நாயர் சிறுகதை



# இனவரைவியல் நோக்கில் தமிழக தலித் கதைப்பாடல்கள்

முனைவர் ச. சீனிவாசன்

தமிழியல் ஆய்வுகளில் நாட்டார் ழக்காற்றியல் ஆய்வுகளின் வீச்சு அதிகமாக ழ்ந்து வருகிறது. நாட்டார் வழக்காற்றியல் ன்றும் விரிந்த பரப்பில் வாய்மொழி ழக்காறுகள் (பாடல்கள், கதையாடல்கள், ந்தொடர் வழக்காறுகள்), புழங்குபொருள் வங்கள்(கைவினைப் பொருள், ஓவியம், மண் சிற்பம், கட்டிடக்கலை), செயல்முறைசார் ழக்காறுகள் (பழக்கவழக்கங்கள், சமயம், டங்கு), நிகழ்த்துகலைகள் (ஆட்டம், பாட்டு, ட்டார் நாடகம்,) ஆகியவற்றை அடக்கலாம். ட்டார் வழக்காறுகளுள் கதைப்பாடல் என்பது ரு குறிப்பிடத்தக்க வகையாகும். இவை ட்டுப்புற இலக்கியங்களாக கருதப்படுகின்றன. ட்டார் வழக்காறுகள் அனைத்தையும் அறிவியல் டிப்படையில் ஆராயும் துறையாக ட்டுப்புறவியல் வளர்ந்துள்ளமை இன்றைய கால டத்தின் தேவையாகும்." நீண்ட கதையை ழ்த்துகலைஞர்களின் குழு, ங்கியல் சூழலிலோ, பொதுநிலைச் ழலிலோ, தனது பார்வையாளர் க்கு முன்னால், இசைக்கருவி ன் பின்னணி இசைக்கிடையே டு, வசனம், உரையாடல் முதலிய ய்மொழிக் கூறுகளின் ஊடாக ழ்த்தும் வடிவமே கதைப்பாட டும்" (இரா. பாலச்சந்திரன், லைஞ்செயன். 2008:8).

நாட்டார் வழக்காறுகளுள் றான கதைப்பாடல் என்னும் வகை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்று இன்றுவரை வளர்ச்சி அடைந்துள்ளது. கதைப்பாடல் என்பது, கதை நிகழ்சிப்போக்கு (Action), பாத்திரங்கள் (Characters), பின்புலம் (Background), கரு (Theme), முதலான பண்புகளைக் கொண்ட கதைப்பாடல்களில் நிகழ்ச்சிப்போக்கு ஆர்வத்தைத் தூண்டுவதோடு நாடகப் பாங்குடன் அமைந்திருக்கும். தமிழ் நாட்டுப்புறக் கதைப்பாடல்களைப் புராண கதைப்பாடல்கள், இதிகாசக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், சமூகக் கதைப்பாடல்கள் என நான்கு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கி வகைப்படுத்தியுள்ளனர் நாட்டுப்புறவியல் அறிஞர்கள். இக்கதைப்பாடல்கள் பல்வேறு இனத்தவரின் வரலாற்றையும் வாழ்க்கை முறையையும் அவர்கள் ஆற்றிய பணிகளையும் செய்த தியாகங்களையும் எடுத்தியம்புகின்றன. அவற்றோடு அந்தந்த நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை, பண்பாடு, சமூகம், சாதியமைப்பு போன்றவற்றையும் எடுத்துக்காட்டு கின்றன. ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது சமூகத்தின் இனப்பரப்பு, தோற்றத் தொன்மம், புலப்பெயர்வு, இன அடையாளக் கூறுகள், உளவியல் கூறுகள், சமூகப் பிரிவுகள், வாழ்க்கைமுறை, தொழில் முதலானவற்றை விரிவாக எடுத்துரைப்பது இனவரைவியல் ஆய்வு ஆகும்.



இணைப்பேராசிரியர், ஸ்ரீ வெங்கடேஸ்வர கல்லூரி, (தில்லிப் பல்கலைக்கழகம்) புது தில்லி-110 021